# <u>இறைவனுடைய சமாதானம்</u>

Praise the Lord: Let us Pray.

**<u>யோவான்/John 14:27</u>** (பக்கம் )

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

Peace I leave with you; my peace I give you. I do not give to you as the world gives. Do not let your hearts be troubled and do not be afraid. (NIC)

**<u>கொலோசெயர்/Colossians 1:19-20</u>** (பக்கம் )

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை **<u>உண்டாக்கி,</u>** பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு **<u>ஒப்புரவாக்கிக்கொள்ளவும்</u>** தேவனுக்குப் பிரியமாயிற்று.

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ **<u>to reconcile</u>** to himself all things, whether things on earth or things in heaven, **<u>by making peace</u>** through his blood, shed on the cross. (கொலோசெயர் 1:19-20)

கடவுள் பக்தியுடன் நீங்கள் வாழ்வதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.
நாம் கடவுளை வணங்கும்போது நமக்கு கிடைக்கும் சந்தோஷம் தெய்வீக சமாதானம் மற்றவைகளோடு ஒப்பிடமுடியாது.
உலகத்தில் எவ்வளவோ காரியங்களில் நமக்கு சந்தோஷமும் சமாதானமும் ஏற்பட்டாலும் அது குறிப்பிட்ட சூழ்நிலையையும் மனநிலையையும் பொறுத்து மாறக்கூடியது. உலகத்தாலே ஏற்படும் இந்த சமாதானம் இந்த உலகத்தோடு முடிந்துவிடும்.
நாம் வணங்கும் கடவுளின் தெய்வீக சமாதானம் என்றும் நம்மோடிருந்து, இம்மைக்கு மட்டுமல்ல இந்த உலகத்திற்குப் பிறகும் நமக்கு ஆத்மீக சமாதானத்தையும் கொடுக்கும்.
அப்படிப்பட்ட தெய்வீக சமாதானத்தை கடவுள் நமக்கு எப்படி கொடுக்கிறார் என்பதை, கடவுளே தன் வார்த்தைகளால் விவரிக்கிறார். அதைத்தான் நாம் வாசித்தோம்.

நாம் கடவுளை பயபக்தியோடு வணங்குவதுபோலவே,
அந்த கடவுள் நமக்கு என்ன சொல்லியிருக்கிறார் என்பதையும் அறிந்தோமானால்,
கடவுள் கொடுக்கும் பூரணசமாதானத்தைப் பெற நாம் நிச்சயமாக வாஞ்சிப்போம்.

கடவுளே கிறிஸ்துவாக வந்து நமக்கு அருளிய இந்த விவரங்களை நீங்கள் வாசிக்க முயற்சித்தால், என்றென்றும் ஜீவிக்கிற ஆண்டவர் உங்களை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பார். ஆமென்.

மீண்டுமாக வசனத்தை வாசிப்போம்:

**<u>யோவான்/John 14:27</u>**

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

Peace I leave with you; my peace I give you. I do not give to you as the world gives. Do not let your hearts be troubled and do not be afraid. (NIC)

*இப்படிப்பட்ட தெய்வீகசமாதானத்தைக்கொடுத்து, கடவுள் நம்மை ஏற்றுக்கொள்ள பிரியப்படுகிறார் என்பதை அறிவிக்கும் இந்த வசனத்தைக் கேளுங்கள்:*

**<u>கொலோசெயர்/Colossians 1:19-20</u>** (பக்கம் )

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை **<u>உண்டாக்கி,</u>** பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு **<u>ஒப்புரவாக்கிக்கொள்ளவும்</u>** தேவனுக்குப் பிரியமாயிற்று.

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ **<u>to reconcile</u>** to himself all things, whether things on earth or things in heaven, **<u>by making peace</u>** through his blood, shed on the cross. (கொலோசெயர் 1:19-20)

God Bless You. Let us Pray